# அரக்கோணம் நகராட்சி
## சாதாரண நகர மன்ற கூட்ட அறிவிப்பு

கூட்ட எண்.26 நாள். 24.07.2023.

பொருள் : நகர மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள்: 31.07.2023 திங்கள்கிழமை மாலை 4.00 மணிக்கு சாதாரண கூட்டம் நடைபெறுதல் – அறிவித்தல் – சம்மந்தமாக.

&&&&&

அரக்கோணம் நகராட்சி நகரமன்றம் சாதாரண கூட்டம் 31.07.2023 திங்கள்கிழமை மாலை 4.00 மணிக்கு டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நகரமன்ற கூடத்தில், நகரமன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் சாதாரண கூட்டத்தில் நகரமன்ற துணை தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

(ஒம்)/–திருமதி.லட்சுமி பாரி,
நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

இடம் : அரக்கோணம் நகராட்சி

நாள் :24.07.2023.

**<u>பொருள் எண். 1</u>**

நகராட்சி ஆணையர் (ம) நகராட்சி பொறியாளர் (பொ) அவர்களின் ஜீன்–2023ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.419** **நாள். 31.07.2023**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

**<u>பொருள் எண். 2</u>**

அரக்கோணம் நகராட்சி 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 78,395 மக்கள் தொகை கொண்டதாகும். 2021ம் ஆணடு நிலவரப்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 90890 ஆகும். வேலூர் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் 3.00 MLD குடிநீரும், அரக்கோணம் – திருத்தணி கூட்டு குடிநீர் திட்டம் (திருப்பாற்கடல்) மூலம் 0.50 MLD, தக்கோலம் நீரேற்றும் நிலையம் மூலம் 4.00 MLD மற்றும் கல்லாறு நீரேற்றும் நிலையம் மூலம் 1.00 MLD ஆக மொத்தம் 8.50 MLD குடிநீர் தினசரி பெறப்பட்டு சராசரியாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 94 லிட்டர் வீதம் ஒரு நாள் விட்டு ஒரு நாள் இடைவெளியில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்று பயன்பாட்டிற்கு வரும் போது நகாரட்சி பகுதியில் நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 135 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க வேண்டியுள்ளது. அதன்படி தற்போதைய மக்கள் தொகைக்கு ஏற்ப நகராட்சிக்கு நாளொன்றுக்கு 12.27 MLD குடிநீர் தேவைப்படுகிறது. ஏற்கனவே 8.50 MLD குடிநீர் தினசரி பெறப்படும் நிலையில் தற்போதுள்ள மக்கள் தொகை கணக்கீட்டின்படி தினசரி 135 LPCD வழங்க கூடுதலாக 5.27 MLD குடிநீர் தேவைப்படுகிறது.

நகராட்சி பகுதிகளில் உள்ள 10 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளின் மூலம் 28.95 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நகரப்பகுதிகளில் உள்ள கடைசி பகுதிகளில் (Tail end) உள்ள வீடுகளுக்கு வழங்கப்படும் குடிநீர் பைப்களில் போதிய அழுத்தம் இல்லாத காரணத்தினால் 188 வால்வுகள் மூலம் 10 மண்டல பகுதிகளாக பிரிக்கப்பட்டு குடிநீர் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்டவாறு குடிநீர் விநியோகம் செய்ய 5.27MLD இடைவெளி இருப்பதாலும், போதிய அளவு கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் இல்லாத காரணத்தினாலும் தினசரி குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே தற்போது உள்ள தக்கோலம் மற்றும் கல்லாறு தலைமை நீரேற்று நிலையத்தில் கூடுதலாக நீர் ஆதாரம் கட்டமைப்பு ஏற்படுத்தி புதியதாக பிரதான குழாய்கள் அமைத்தும் நகரப்பகுதிகளில் கூடுதலாக மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள், கீழ்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் பழுதடைந்த பகிர்மான குழாய்களை புதியதாக மாற்றி அமைக்க ஆகிய பணிகளுக்கு ரூ.600.00 இலட்சம் உத்தேச மதிப்பீட்டில் தயார் செய்யவும், அத்திட்ட அறிக்கையினை தனியர் (Consultancy) மூலமாக மதிப்பீடு தயார் செய்திட ஆகும் உத்தேச ஆலோசனை கட்டணம் (Consultancy Fees) ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கண்ட பணியினை தனியரின் மூலம் செய்து முடிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : குடிநீர் பணியின் அவசியத்தை கருதியும், எதிர் வரும் கோடை காலத்தினை கருதித்தில் கொண்டும் நகரமன்றத்தின் முன் அனுமதி எதிர் நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.692/2023/இ1)

**தீர்மானம் எண்.420** **நாள். 31.07.2023**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

**பொருள் எண். 3**

அரக்கோணம் நகராட்சியில் 2022-23-ம் ஆண்டிற்கான 15வது மத்திய நிதிக்குழு (Tied Grant) திட்டத்தின் கீழ் 26.06.2023 அன்று கீழ்காணும் பணிக்கு மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதற்கான ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | 2022-23 ஆம் ஆண்டிற்கான 15 வது மத்திய நிதிக்குழு (Tied Grant) திட்டத்தின் கீழ் அரக்கோணம் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள 5 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்கதொட்டி பராமரிப்பு பணி செய்தல். **(நிர்வாக அனுமதி நகரமன்ற தீர்மான எண்.395 நாள் 31.05.2023)** | 9.90 | **M.N.விஜய பாஸ்கர்** | **-0.00%** | **K.முனுசாமி** | **0.80%** |

அலுவலக குறிப்பு : மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்று மேற்படி திட்டப்பணியின் அவசரம் அவசியம் கருதி நகரமன்றத்தின் முன் அனுமதி எதிர் நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.716/2023/இ1)

**தீர்மானம் எண்.421** **நாள். 31.07.2023**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

**பொருள் எண். 4**

நமக்கு நாமே திட்டம் (NNT) 2022-23 ஆம் ஆண்டிற்கான கீழ்காணும் பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் செயல்முறை ஆணை எண்3514/2021/பி2 நாள் 27.06.2023ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கடித நகல் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வார்டு எண் | பணியின் விவரம் | தோராய மதிப்பீடு (ரூ.இட்சத்தில்) | அரசு மான்யம் தொகை ரூ. | பொதுமக்கள் பங்களிப்பு மூலம் பெறப்பட்டுள்ள தொகை ரூ |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 3 | வார்டு எண் 3 கணேஷ் நகர் 2வது தெரு மற்றும் கணேஷ் நகர் 9 வது தெரு ஆகிய குடியிருப்பு பகுதிகளில் CCTV கேமரா பொருத்தும் பணி | 4.90 | 3,26 | 1.64 |
| | | **மொத்தம் ரூ.** | **4.90** | **3.26** | **1.64** |

அலுவலககுறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1207/இ1/2022)

**தீர்மானம் எண்.422** **நாள். 31.07.2023**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

**பொருள் எண். 5**

நமக்கு நாமே திட்டம் (NNT) 2022-23 ஆம் ஆண்டின் கீழ் 20.07.2023 அன்று கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | வார்டு எண் 3 கணேஷ் நகர் 2வது தெரு மற்றும் கணேஷ் நகர் 9 வது தெரு ஆகிய குடியிருப்பு பகுதிகளில் CCTV கேமரா பொருத்தும் பணி | 4.90 | P.வீரராகவன் | -0.16% | S.ரமேஷ் பாபு | 0.05% |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்று மேற்படி திட்டப்பணியின் அவசரம் அவசியம் கருதி நகரமன்றத்தின் முன் அனுமதி எதிர் நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1207/2022/இ1)**

**தீர்மானம் எண்.423** **நாள். 31.07.2023**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

**பொருள் எண். 6**

அரசாணை (நிலை) எண்.98 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 13.07.2023ல், மாநகராட்சி மேயர்கள், துணை மேயர்கள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்கள், தாங்கள் முழுநேர மக்கள் பணியில் ஈடுபட்டுள்ளதால், தங்களுக்கு மாதந்தோறும் கீழ்காணும் விவரப்படி

ஜீலை 2023 ஆம் மாதம் முதல் மதிப்பூதியம் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி வரப்பெற்றுள்ள அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | மாதம் ஒன்றிற்கு மதிப்பூதியம் {ரூபாயில்) |
|---|---|---|
| I | **மாநகராட்சிகள் (Municipal Corporations)** | |
| 1 | மேயர் | 30,000 (ரூபாய் முப்பதாயிரம்) |
| 2 | துணை மேயர் | 15,000 (ரூபாய் பதினைந்தாயிரம்) |
| 3 | மாமன்ற உறுப்பினர் | 10,000 (ரூபாய் பத்தாயிரம்) |
| II | **நகராட்சி மன்றங்கள் (Municipal Councllis)** | |
| 1 | நகர்மன்ற தலைவர் | 15,000 (ரூபாய் பதினைந்தாயிரம்) |
| 2 | நகர்மன்ற துணைத் தலைவர் | 10,000 (ரூபாய் பத்தாயிரம்) |
| 3 | நகர்மன்ற உறுப்பினர் | 5,000 (ரூபாய் ஐந்தாயிரம்) |
| III | **பேரூராட்சிகள் (Town Panchayats)** | |
| 1 | பேரூராட்சி தலைவர் | 10,000 (ரூபாய் பத்தாயிரம்) |
| 2 | பேரூராட்சி துணைத் தலைவர் | 5,000 (ரூபாய் ஐந்தாயிரம்) |
| 3 | பேரூராட்சி மன்ற உறுப்பினர் | 2,500 (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு) |

அலுவலககுறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.590/இ1/2022)

**தீர்மானம் எண்.424** **நாள். 31.07.2023**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

**<u>பொருள் எண்.7</u>**

அரசாணை (நிலை) எண்.98 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 13.07.2023ல், மாநகராட்சி மேயர்கள், துணை மேயர்கள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்கள், தாங்கள் முழுநேர மக்கள் பணியில் ஈடுபட்டுள்ளதால், தங்களுக்கு மாதந்தோறும் கீழ்காணும் விவரப்படி ஜீலை 2023 ஆம் மாதம் முதல் மதிப்பூதியம் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி அரக்கோணம் நகராட்சியில் நகரமன்றத்தில் உள்ள நகரமன்ற தலைவர், துணைத்தலைவர், மற்றும் 34 நகர மன்ற உறுப்பினர்களுக்கும் கீழ்காணும் விவரப்படி மதிப்பூதியம் வழங்க 01.07.2023 முதல் 30.06.2024 வரை ஓர் ஆண்டிற்கு ரூ.23.40 இலட்சம் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | மாதம் ஒன்றிற்கு மதிப்பூதியம் {ரூ) | மாதம் ஒன்றிற்கு மொத்த தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | நகர்மன்ற தலைவர் | ரூ.15,000 X 1 | ரூ.15,000 |
| 2 | நகர்மன்ற துணைத் தலைவர் | ரூ.10,000 X 1 | ரூ.10,000 |
| 3 | நகர்மன்ற உறுப்பினர்கள் | ரூ.5,000 X 34 | ரூ.1,70,000 |
| | **ஓர் மாதத்திற்கான மொத்த தொகை** | | ரூ.1,95,000 |
| | **ஓர் ஆண்டிற்கான மொத்த தொகை** | | ரூ.23,40,000 |

அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.590/இ1/2022)

**தீர்மானம் எண்.425** **நாள். 31.07.2023**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

**பொருள் எண். 8**

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2023-24ஆம் ஆண்டின் கீழ் அரக்கோணம் நகராட்சியில் கீழ்காணும் 4 சிப்பங்களுக்கான சிமெண்ட் சாலைப்பணிகளை மேற்கொள்ள ரூ.161.80 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி 23.06.2023 அன்று கோரப்பட்டு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் சிப்பம் -1 முதல் சிப்பம் 4 வரை மொத்தம் 4 எண்ணிக்கை ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது, வரப்பெற்ற நான்கு சிப்பங்களுக்கான ஒப்பந்தப்புள்ளிகளும் தகுதி பெற்றதை தொடர்ந்து 26.06.2022 அன்று விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) திறக்கப்பட்டதில் பின்வருமாறு வரப்பெற்றுள்ளது.

| சிப்ப | பணியின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | Providing CC surface Road at Ganesh Nagar 2nd Street- 024003R030,Ganesh Nagar 3rd Cross Street- 024003R033,Ganesh Nagar 5th Street- 024003R036,Ganesh Nagar 6th Street Mosque Street- 024003R066,Ganesh Nagar 6th Cross Street- 024003R065 at Ward-03 in Arakkonam Municiapality. | 36.00 | R.K.Construction ஆற்காடு | -0.01 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | Providing CC surface Road at Ganesh Nagar 6th Street - 024003R039 in Ward-03;Sasthiri 3rd Cross Street- 024004R108,TNHB(M308-M303)- 024004R121 in Ward-04; Townhall 3rd Cross Street-024006R181 in Ward-06; Galiwari Kandigai 5th Street- 024008R223 in Ward-08 at Arakkonam Municiapality. | 36.00 | திரு.S.ரமேஷ்பாபு அரக்கோணம் | 0.00 % மதிப்பீட்டு விகிதம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | Providing CC surface Road at Jegajeevanram Road (B K NAGAR)-024009R250,Lakshmi Nagar Adjustsnt Street-024009R197 in Ward-09;Bajanai Koil Street-024011R261 in Ward-11; Jubliee Road-024012R266 in Ward-12 at Arakkonam Municiapality. | 33.80 | திரு.S.ரமேஷ்பாபு அரக்கோணம் | -0.01 % மதிப்பீட்டை விட குறைவு |
| 4. | Providing CC surface Road at East Oppanakara Street-024017R293 in Ward-17; Kannan Flour Mill Street-024018R296,Mettu Street-024018R295;Girisingh Main Street 3rd Cross Street-024020R335 in Ward-20; Somasundaram Nagar 1st Street 4th Cross Street -024027R525 in Ward-27;EB Road-024032R434 in Ward-32 in Ward-18 at Arakkonam Municiapality. | 56.00 | திரு.Kமுனுசாமி அரக்கோணம் | 0.00 % மதிப்பீட்டு விகிதம் |

மேற்காணும் சிப்பம் எண் 1 .முதல் சிப்பம் 4 வரையிலான பணிகளுக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு விகிதம் மற்றும் மதிப்பீட்டை விட குறைத்து வழங்கியுள்ள ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும், அதற்கான செலவினத்தொகையை வழங்கவும், மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்று மேற்படி திட்டப்பணியின் அவசரம் அவசியம் கருதி நகரமன்றத்தின் முன் அனுமதி எதிர் நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.697/2023/இ1)**

**தீர்மானம் எண்.426** **நாள். 31.07.2023**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

<u>பொருள் எண். 9</u>

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.02 காந்தி ரோடு, ஜோதிநகர் (வார்டு-B, பிளாக்-4, TS.NO-37) பகுதியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ள 15வது நிதிக்குழு சுகாதார மானியம் 2023 -24 ஆண்டின் கீழ் ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் செயல்முறை ஆணை எண். 19731/2023/CFC-1 நாள் 17.07.2023-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வரப்பெற்றுள்ள நிர்வாக அனுமதியின் நகல் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.02 காந்தி ரோடு, ஜோதிநகர் (வார்டு–B, பிளாக்–4, TS.NO–37) பகுதியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டடம் கட்டும் பணி. | 120.00 |
| | மொத்தம் ரூ | 120.00 |

<u>அலுவலக குறிப்பு</u>: மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.767/2023/இ1)

**தீர்மானம் எண்.427** நாள். 31.07.2023

அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,

<u>பொருள் எண். 10</u>

மகளிருக்கு மாதம் தோரும் ரூ.1000/– வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு அரசாணை (நிலை) எண் 15, சிறப்பு திட்டச் செயலாக்க துறை நாள். 10.07.2023ல் ஆணையிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து 24.07.2023 முதல் 04.08.2023 வரை முதல் கட்டமாக முகாம் நடைபெற உள்ளதாக இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.எண்.ஐ4–5295/2023 நாள் 17.07.2023–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் முகாம் நடைபெறும் நாட்களான 24.07.2023 முதல் 04.08.2023 வரை (காலை 09.30 – 01.00 மற்றும் மாலை 2.00 முதல் 5.30 மணி நேரத்தில்) விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களை பெற்று கைப்பேசியில் பதிவேற்றம் செய்யும் பணியை கண்காணித்தல், முகாம் அலுவலர்களால், முகாம் நாளன்று பெறப்படும் விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைத்தல் ஆகிய பணிகளை தொய்வின்றி செய்து முடிக்க முகாமிற்கு தேவையான அடிப்படை பணிகளான குடிநீர், கழிப்பறை வசதி, சார்மினா பந்தல் அமைத்தல், நாற்காலி, டேபிள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் சாய்வுதளம் அமைத்தல் (Ramp) மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் கைக்குழந்தைகள் வைத்திருக்கும் தாய்மார்களுக்கு காத்திருக்கும் அறை ஆகியவை தயார் செய்ய தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண். 801/2023/எப்1)

**தீர்மானம் எண்.428** நாள். 31.07.2023

அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,

<u>பொருள் எண். 11</u>

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.12 ,பஜார் தெருவில் அமைந்துள்ள தினசரி நாளங்காடியில் 194 சுருள் கதவுகளுடன் கூடிய கடைகள் , 64 திறந்த வெளி கடைகள் மற்றும் மினி மார்கெட் 12 கடைகள் ஆக மொத்தம் 270 கடைகள் மிகவும் பழுது ஏற்பட்டதன் காரணமாகவும், ஸ்திர தன்மையை கருத்தில் கொண்டும் மாண்பு மிகு அமைச்சர், நகராட்சி நிர்வாக துறை அவர்களின் சட்ட மன்ற அறிவிப்பு எண்–21 ன் படி பழைய கடைகளை இடித்து விட்டு அதே இடத்தில் புதியதாக கடைகள் கட்டுவதற்கு ரூ.6.82 கோடிக்கு கலைஞர் மேம்பாட்டு நிதி (KNMT) 2022–2023 ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசால் நிர்வாக அனுமதி அரசாணை (4D) எண்.23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.01.12.2022ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1652/2023/மாதி.1, நாள்.13.07.2023 ன்படி பழுதடைந்த பழைய தினசரி நாளங்காடி கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து, தினசரி நாளங்காடியில் உள்ள 270 கடைகளுக்களை இடித்து அப்புறப்படுத்த பட உள்ளதால் குத்தகைதாரர்கள் கடைகளை அனுபவித்த காலத்திற்கான கேட்பினை ஜுன் 2023 வரை கணினியில் எழுப்பவும், ஜுலை–2023 முதல் கேட்பினை கணினியில் நிறுத்தம் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u> தினசரி நாளங்காடியில் உள்ள 270 கடைகளுக்கான கேட்பினை ஜுன் 2023 வரை கணினியில் கேட்பினை எழுப்பவும், ஜுலை–2023 முதல் கேட்பினை கணினியில் நிறுத்தம் செய்யவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**(ந.க.எண். 1445/2022/அ1)**

**தீர்மானம் எண்.429** **நாள். 31.07.2023**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

**<u>பொருள் எண். 12</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை குப்பை சேகரிப்பு செய்து அதனை அப்புறப்படுத்துதல், தினசரி வீடுகள் மற்றும் தெருக்களிலுள்ள மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து சேகரித்து On site Composting மற்றும் Micro Compost Centre (MCC) தொட்டிகளில் சேர்க்கும் பணிக்கும், 36 வார்டுகளிலுள்ள தெருக்களின் பின்புறத்தில் அமைந்துள்ள சந்துகளில் உள்ள குப்பைகளை மற்றும் கால்வாய்களை சுத்தம் செய்தல், தூர்வாருதல், தெருக்களை பெருக்குதல் போன்ற பணியினை மேற்கொள்ள இந்நகராட்சியில் உள்ள 106 தூய்மைப் பணியாளர்களை கொண்டு முழுமையாக அப்புறப்படுத்த முடியாத காரணத்தினால் இந்நகராட்சிக்கு கூடுதலாக மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி அடிப்படையில் வெளிகொணர்வின் மூலம் 195 பணியாளர்களை நியமித்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை, அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.30813/J3/2018 நாள்:11.12.2018.ல் ஆணை வழங்கப்பட்டு ஆணையர், அரக்கோணம் நகராட்சி அவர்களின் பணி உத்திரவு ந.க.எண் 2835/2018/எச்1 நாள்: 30.07.2020–ல் ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் நிறுவனத்திற்கு 01.08.2020 முதல் 31.07.2021 வரை வெளிக்கொணர்வின் மூலம் 195 தூய்மை பணியாளர்களை வழங்க கோரி பணி உத்திரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் 31.07.2021 தேதியுடன் பணி உத்திரவு முடிவடைந்ததால் ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வரும் அதே மதிப்பீட்டில் மேற்படி நிறுவனத்தின் மூலம் தொடர்ந்து வெளிக்கொணர்வு பணியினை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தொடர்ந்து மன்றத்தால் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி நீட்டிப்பு காலம் 31.05.2023 உடன் முடிவடைந்துள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.38553/2022/EA–2–SWM நாள்.10.01.2023ல் ஒப்புதலுடன் புதிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நகர மன்ற தீர்மான எண்.391 நாள்.18.05.2023ன்படி ஒப்பந்ததாரர் M/S.ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் அவர்களுக்கு 26.05.2023 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் 16.06.2023 முதல் தொடங்கப்பட்டுள்ளது. எனவே 31.05.2023 அன்றுடன் முடிவுப்பெற்ற ஒப்பந்த நீட்டிப்பு காலத்தை பணியின் அவசர அவசியம் கருதி 01.06.2023 முதல் 15.06.2023 வரை அதே ஒப்பந்ததாரரை, அதே விலைப்புள்ளி விகிதத்தில் தொடர் நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்கான செலவின தொகை ரூ.14.00 லட்சம் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள நகர மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி 30.05.2023 அன்று நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 483/2018/எச்1)

**தீர்மானம் எண்.430** **நாள். 31.07.2023**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

<u>பொருள் எண். 13</u>

<u>நகரமன்ற தலைவர் திருமதி.லட்சுமி பாரி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

**மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்திரவின் பேரில்** அரசாணை (நிலை) எண்.98 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 13.07.2023ல், மாநகராட்சி மேயர்கள், துணை மேயர்கள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்கள், தாங்கள் முழுநேர மக்கள் பணியில் ஈடுபட்டுள்ளதால், தங்களுக்கு மாதந்தோறும் ஜீலை 2023 ஆம் மாதம் முதல் மதிப்பூதியம் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளதற்கு இந்நகரமன்றத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

**தீர்மானம் எண்.431** **நாள். 31.07.2023**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

<u>பொருள் எண். 14</u>

<u>. 3-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.கி.சரவணன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1) அரக்கோணம் நகராட்சி 3வது வார்டுக்குட்பட்ட கணேஷ் நகர் முதல் தெருவில் அமைந்துள்ள D.V.S NAGAR LAYOUT-ல் பூங்கா அமைக்க இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. எனவே அவ்விடத்தை பராமரித்து பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பூங்கா அமைத்து தர கேட்டுக் கொள்கிறேன்.
2) கணேஷ் நகர் 2வது தெருவில் பூங்கா அமைக்கப்பட உள்ள இடத்தின் மீது வழக்கு நிலுவையில் உள்ளது. எனவே வழக்கினை விரைந்து முடித்து அவ்விடத்தில் பூங்கா அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.
3) கணேஷ் நகர் 5வது தெருவில் சாலைப்பணி நடைபெற இருப்பதால் அத்தெருவில் நீண்ட நாட்களாக உள்ள தண்ணீர் பிரச்சனை சரி செய்ய ஏதுவாக பகிர்மான பைப்லைன் மாற்றி விரைவில் சீரமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.432** **நாள். 31.07.2023**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

<u>பொருள் எண். 15</u>

<u>7-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.P.சங்கீதா பாண்டியன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>

1) தோல் ஷாப் மெயின் ரோட்டில் உள்ள மெயின் பைப்லைன் 60 அடி நீளம் வரை நசுங்கி உள்ளது அதனை மாற்றி தருமாறு கோருதல்.
2) தோல் ஷாப் உள்ள ஏரி மடுவில் புதிய கல்வெட்டு அமைக்க கோருதல்.

**தீர்மானம் எண்.433** **நாள். 31.07.2023**

**அலுவலக குறிப்பு :- மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

<u>பொருள் எண். 16</u>

**<u>12–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.K.ரஷிதா கரிமுல்லா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>**

1) 12 வது வார்டில் உள்ள மசூதி சந்து தெரு மணியகார தெரு மற்றும் பஜார் தெருவில் சாலை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.
2) 12 வது வார்டில் உள்ள மணியக்காரத்தெரு கடைசியில் மினி பவர் பம்பு அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.434** **நாள். 31.07.2023**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

<u>பொருள் எண். 17</u>

**<u>22–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.S.மல்லிகா சீனிவாசன், அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>**

1) 22 வது வார்டு ஓம் சக்தி கோயில் தெரு மிகவும் குண்டும் குழியுமாக உள்ளது. எனவே அதற்கு புதிய தார் சாலை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.
2) சோளிங்கர் ரோடு கல்லறை பக்கத்தில் உள்ள தெரு சாலை வசதி இல்லாமல் உள்ளது. ஆகவே அந்த வழி பாதைக்கு தார் சாலை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.435** **நாள். 31.07.2023**

**அலுவலக குறிப்பு :– மன்றத்தில் அனுமதிக்கப்பட்டது,**

(ஒம்)/–திருமதி.லட்சுமி பாரி,
நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

**// உண்மை நகல் //**

ஆணையர்(கூ.பொ)
அரக்கோணம் நகராட்சி.